கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2008/2009 (டிசம்பர் 2009) (விசேட பரீட்சை)

LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka

# ECO 3202 Public Finance

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01.(அ) ஒரு பொருளாதாரத்தில் அரசாங்கத் தலையீட்டிற்கு அடிப்படையாக அமையும் விடயங்களை உதாரணங்களுடன் நியாயப்படுத்துக? (15 புள்ளிகள்)

(ஆ) பரட்டோவின் உத்தமநிலை (Pareto Optimum) ஒரு பொருளாதாரத்தில் எவ்வாறு அடைந்து கொள்ளப்படுகின்றது? (10 புள்ளிகள்)

02 (அ) ஒரு பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் ஒதுக்கீட்டுப்பணி (Allocative Role) ஏன் தேவையானது என்பதை விளக்குக? (15 புள்ளிகள்)

(ஆ) குறைந்து செல்லும் செலவினைக் கொண்ட தொழில்கள் தொடர்பாக அரசாங்கத்தின் மேற்கூறிய பணி எவ்வாறு அமைகின்றது? (10 புள்ளிகள்)

03.(அ) பொதுப் பொருட்களையும், தனியார் பொருட்களையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக? (10 புள்ளிகள்)

(ஆ) புறவிளைவுகள் (Externalities) என்றால் என்ன? அதனை எவ்வாறு வகைப்படுத்தலாம்? (10 புள்ளிகள்)

(இ) முதன்மைப் பொருட்கள் (Merit goods) என்றால் என்ன? (05 புள்ளிகள்)

04.(அ) சமூகத் தெரிவு பற்றிய பிரச்சினைகளில் காணப்படும் பிரதான அணுகுமுறைகள் எவை? (05 புள்ளிகள்)

(ஆ) பெரும்பான்மை வாக்கெடுப்பு முறையானது பரட்டோவின் திறமை நிலையை எந்தளவுக்கு உறுதிப்படுத்தக்கூடும்? (10 புள்ளிகள்)

(இ) வாக்கெடுப்பு முறைமூலம் விருப்ப தெரிவுகளின் தீவிரத் தன்மையை (Intensity of Preference) வெளிப்படுத்த முடியுமா? உதாரணம் தந்து விளக்குக? (10 புள்ளிகள்)

05.(அ) "அரசாங்கச் செலவுகள் பற்றிய மாதிரியில் வக்னரின் விதி (Wagner's Law) பொதுத்துறைத் தேவைகளின் அவசியத் தன்மை பற்றி விவரிக்கின்றது." இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "பீகொக் - வைஸ்மன் (Peacook - Wiseman) ஆகியோரின் அணுகுமுறையானது அரசாங்க செலவினது கால வடிவமைப்பினை (Time pattern) கணிப்பிடும் ஒரு முயற்சியாக அமைந்துள்ளது." இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக

(அ) இலவசப் பயணி (Free Rider)

(ஆ) பொதுமைகளின் துன்பியல் (Tragedy of Commons)

(இ) வரிவிதிப்பின் தத்துவங்கள் (Principles of Taxtian)

(ஈ) அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தல் தொழிற்பாடு (Requlatory Role)

(உ) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)

(ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)

**********